Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.352/2020

**Depositions of PW- 5**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.கருத்தப்பாண்டி | Occupation | சார்பு ஆய்வாளர் |
| Father's name | சுந்தர்ராஜன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of February 2026.

19.02.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**சாட்சி காணொளி காட்சி மூலம் ஆஜர் ஆனார்**

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை ஆயிரம் விளக்கு காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியிலிருந்தபோது கடந்த 03.03.2019 அன்று தலைமை காவலர் கோவிந்தன் 1759 என்பவர் பதிவு செய்து வைத்திருந்த வழக்கு எண்.137/2019 பிரிவுகள்.379 இதச வழக்கு கோப்பை எனது மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 11.15 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ஸ்டீபன் மற்றும் சாலமன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **பார்வை மகஜர் அசாஆ.7 ஆகவும் வரைபடம் அசாஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் அந்தோணி செல்வி, கலைசெல்வி, கனகராஜ் ஆகியோர்களை தனித்தனியோ விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் தலைமை காவலர் கோவிந்தன் என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையில் சம்பவம் உண்மையென தெரியவந்ததால் எதிரியை தேடி வந்து இவ்வழக்கு தொடர் விசாரணையில் இருந்து வந்த நிலையில் 26.11.2019 ம்

தேதி 10.00 மணிக்கு திருவில்லிபுத்தூர் கனரா வங்கி அருகே சந்தேகத்தின் பேரில் நின்றுகொண்டிருந்த மணிமாலா என்பவரை பிடித்து விசாரணை செய்ததில் அவர் முன்னுக்கு பின் முரணாக சொன்னதால் காரணம் கூறி கைது செய்து பின்னர் 10.20 மணிக்கு சாட்சிகள் தமிழரசன் மற்றும் ஆஞ்சே ஆகியோர் முன்னிலையில் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மணிமாலாவிடம் குற்ற எண்.549/2019 வழக்கின் சொத்தை கைப்பற்றியும் வாக்குமூலத்தின் அடிப்படையில் 12.30 மணிக்கு சிவகாசி அனுப்பங்குளம் சத்யா நகர் மகாலட்சுமி வீட்டின் முன்பு எதிரி மணிமாலா அடையாளம் காட்டிய வழக்கு சொத்தை மகாலட்சுமி என்பவரிடமிருந்து 3 1/4 பவுன் டாலருடன் கூடிய தங்க செயின் ஒன்று அறுந்த நிலையில் அத்தாட்சியின் பேரில் அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி வாக்குமூலம் பதிவு செய்தேன். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ.9 ஆகவும், அத்தாட்சி அசாஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் கைப்பற்றிய சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். **படிவம் 91 அசாஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். பின்னர் சாட்சி அந்தோணி செல்வி என்பவரை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 09.01.2021 அன்று எனது புலன் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவு.379 இதச வின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

மேற்படி சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் புகார் மனு பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜர், வரைபடம், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி போன்ற ஆவணங்கள் வழக்கிற்காக காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. இவ்வழக்கினை சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் குற்ற இறுதியறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.